**ஜனவரி – 26**


# TNPSC துளிகள்

- மத்திய உள்துறை அமைச்சகமானது குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019 என்ற சட்டத்தை 2020 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் தேதியன்று அரசிதழில் வெளியிட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவு – 2018 ஆம் ஆண்டில் இந்தியாவில் நிகழ்ந்த குற்றங்கள்

- 2018 ஆம் ஆண்டில் இந்தியாவில் 50 லட்சத்துக்கும் மேற்பட்ட தெளி குற்றங்கள் (அறிவாற்றல் குற்றங்கள்) பதிவு செய்யப் பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது தற்பொழுது (2018) இந்தியாவில் தெளி குற்றங்கள் ஆனது 1.3% அதிகரித்துள்ளது.
- ஆனால் ஒரு லட்சம் மக்களுக்கான குற்றங்கள் என்ற விகிதமானது 2018 ஆம் ஆண்டில் 383.6 ஆகக் குறைந்துள்ளது. இந்தக் குற்ற விகிதமானது 2017 ஆம் ஆண்டில் 388.6 ஆக இருந்தது.
- சுருக்கமாக, 2016 ஆம் ஆண்டில் இருந்து இந்தியாவில் குற்ற விகிதமானது குறைந்துள்ளது. ஆனால் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் குற்றங்களின் எண்ணிக்கை ஆகியவை அதிகரித்துள்ளன.
- தெளி குற்றங்கள் அல்லது வழக்குகள் என்பவை காவல் நிலையத்தின் பொறுப்பு அதிகாரி ஒருவர், நீதிபதியின் உத்தரவு இல்லாமல் ஒருவரை விசாரித்து, அந்த நபரை நீதிபதியின் பிடியாணையின்றி கைது செய்தல் என்று வரையறுக்கப் படுகின்றது.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசியக் குற்ற ஆவணக் காப்பகமானது (National Crime Records Bureau - NCRB) இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் நாட்டில் உள்ள சிறப்பு & உள்ளூர் சட்டங்களால் வரையறுக்கப்பட்ட குற்றத் தரவுகளை சேகரித்து, அதைப் பகுப்பாய்வு செய்வதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது.



***தற்கொலைகள்***

- 2018 ஆம் ஆண்டில் நாட்டில் ஒட்டுமொத்தமாக 1,34,516 தற்கொலைகள் பதிவாகி உள்ளன. இது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 3.6 சதவீதம் அதிகரித்துள்ளது.
- தினசரிக் கூலித் தொழிலாளர்கள், ஆண்டுக்கு ரூ. 1 லட்சத்துக்கும் குறைவாக வருமானம் ஈட்டக் கூடிய ஆனால் இடைநிலைக் கல்வி வரை படித்தவர்கள் ஆகியோர் 2018 ஆம் ஆண்டில் இந்தியாவில் நிகழ்ந்த தற்கொலைகளின் எண்ணிக்கையில் அதிக பங்கைக் கொண்டுள்ளனர்.
- அதிக எண்ணிக்கையிலான தற்கொலைகள் மகாராஷ்டிராவில் (17,972) நிகழ்ந்து உள்ளன. இதற்கு அடுத்து தமிழகம் (13,896), மேற்கு வங்கம் (13,255), மத்தியப் பிரதேசம் (11,775), கர்நாடகா (11,561) ஆகிய மாநிலங்களில் அதிக எண்ணிக்கையிலான தற்கொலைகள் பதிவாகியுள்ளன.
- நாட்டின் மக்கள் தொகையில் 16.9 சதவீத பங்குடன் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலமான உத்தரப் பிரதேசமானது தற்கொலை இறப்புகளில் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும் பொழுது குறைந்த சதவீத இறப்புகளைப் பதிவு செய்துள்ளது. இது 2018 ஆம் ஆண்டில் நாட்டில் நிகழ்ந்த மொத்த தற்கொலைகளில் 3.6 சதவீதத்தை மட்டுமே கொண்டுள்ளது.
- அதிக மக்கள் தொகை கொண்ட ஒன்றியப் பிரதேசமான தில்லி ஆனது ஒன்றியப் பிரதேசங்களிடையே அதிக எண்ணிக்கையிலான தற்கொலைகளை (2,526) பதிவு செய்துள்ளது. இதனைத் தொடர்ந்து புதுச்சேரி (500) ஒன்றியப் பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையிலான தற்கொலைகள் பதிவாகியுள்ளன.

***வேலையின்மை காரணமாக நிகழ்ந்த தற்கொலைகள்***

- விபத்து மூலமான இறப்புகள் மற்றும் தற்கொலைகள் குறித்த NCRB தரவுகளின் படி, 2018 ஆம் ஆண்டில் மொத்தம் 12,936 வேலைவாய்ப்பற்ற நபர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.
- இது மொத்த தற்கொலைகளில், அதாவது 1,34,516 தற்கொலைகளில் 9.6 சதவீதமாக உள்ளது.
- இவர்கள் 18 வயதுக்குக் குறைவானவர்களாகவும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் இருந்துள்ளனர்.
- அதே ஆண்டில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கையை விட இந்த எண்ணிக்கையானது அதிகமாக உள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மணி நேரத்திலும் (ஒரு மணி நேரத்திற்கு ஒருவர்) ஒரு வேலைவாய்ப்பற்ற நபர் தற்கொலை செய்து கொண்டதாக NCRB தரவு தெரிவித்து உள்ளது.
- வேலைவாய்ப்பற்ற நபர்களின் அதிக எண்ணிக்கையிலான தற்கொலைகள் விகிதமானது கேரளாவில் 12.3 சதவீதமாகவும் தமிழ்நாட்டில் 12.2 சதவீதமாகவும் மகாராஷ்டிராவில் 9.7 சதவீதமாகவும் கர்நாடகாவில் 8.5 சதவீதமாகவும் உத்தரப் பிரதேசத்தில் 7 சதவீதமாகவும் உள்ளன.

***விவசாயிகள் தற்கொலைகள்***

- விவசாயத் துறையில் ஈடுபடும் நபர்களின் தற்கொலைகள் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகக் குறைந்துள்ளன.
- 2018 ஆம் ஆண்டில் 5763 விவசாயிகள்/ குத்தகைதாரர்கள், 4586 விவசாயக் கூலிகள் தற்கொலை செய்து கொண்டு உள்ளனர்.
- மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளான விவசாயத் துறையில் தற்கொலை விகிதமானது நாட்டில் மொத்தம் நிகழ்ந்த 134,516 தற்கொலைகளில் 7.7% ஆக உள்ளது.

- அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் தற்கொலைகளில் மகாராஷ்டிரா மாநிலம் 34.7% சதவிகிதத்துடன் முன்னணியில் உள்ளது. இதற்கு அடுத்து அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் தற்கொலை விகிதமானது கர்நாடக மாநிலத்தில் 23.2% ஆகவும் தெலுங்கானா மாநிலத்தில் 8.8% ஆகவும் ஆந்திரப் பிரதேசத்தில் 6.4% ஆகவும் மத்தியப் பிரதேசத்தில் 6.3% ஆகவும் உள்ளன.
- நாட்டின் விவசாயத் துறையில் நிகழ்ந்த மொத்தத் தற்கொலைகளில் பாதிக்கும் மேலானவை மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் மட்டுமே நிகழ்ந்துள்ளன.
- மேற்கு வங்கம், பீகார், ஒடிசா, உத்தரகாண்ட், மேகாலயா, கோவா ஆகிய மாநிலங்களிலும் தில்லி உள்ளிட்ட ஒன்றியப் பிரதேசங்களிலும் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் யாரும் தற்கொலை செய்து கொள்ளவில்லை என்று பதிவு செய்யப் பட்டுள்ளது.

## சபாநாயகரின் பங்கு

- இந்தத் தீர்ப்பை இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி நாரிமன் என்பவர் நீதிபதிகள் அனிருத்தா போஸ் மற்றும் வி. ராமசுப்பிரமணியன் ஆகியோருடன் இணைந்து எழுதி உள்ளார்.
- அமைச்சர் டி.ஷியாம்குமார் என்பவரைத் தகுதி நீக்கம் செய்ததற்காக மணிப்பூர் சட்டமன்றச் சபாநாயகருக்கு எதிராக காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் கெய்ஷாம் மேகச்சந்திர சிங் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில் இந்தத் தீர்ப்பானது வெளி வந்துள்ளது.
- காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் போட்டியிட்ட ஷியாம்குமார், பின்னர் என். பிரேன் சிங் தலைமையிலான பாஜக அரசுக்கு ஆதரவாக அந்தக் கட்சியில் இணைந்து கொண்டார்.
- இவரது தகுதிநீக்க மனுவின் மீது நான்கு வாரங்களில் முடிவு செய்யுமாறு அம்மாநிலச் சட்டமன்ற சபாநாயகரை உச்ச நீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.

### *பரிந்துரைகள்*

- கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் (Anti-Defection Law - ADL) கீழ் முடிவெடுக்கும் அதிகாரியாக இருக்கும் சபாநாயகரின் நிலை குறித்து உச்ச நீதிமன்றம் சில முடிவுகளை எடுத்துள்ளது.
- கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினர்களை தகுதி நீக்கம் செய்ய வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதைத் தீர்மானிப்பதற்காக சட்டமன்ற சபாநாகர்களால் பயன்படுத்தப்படும் பிரத்தியேக அதிகாரத்தை நீக்க அரசியலமைப்பில் திருத்தம் செய்யுமாறு இந்திய உச்ச நீதிமன்றம் இந்திய நாடாளுமன்றத்தை கேட்டுக் கொண்டுள்ளது.
- இந்திய அரசியலமைப்பின் பத்தாவது அட்டவணையின் கீழ் வரும் தகுதிநீக்க மனுக்களைப் பாராளுமன்றம் அல்லது சட்டமன்றங்கள் ஆகியவற்றின் வரம்புகளுக்கு வெளியே ஒரு நெறிமுறையால் தீர்க்கப்பட வேண்டும்.
- பணம் மற்றும் அதிகாரத்திற்காக கட்சி தாவிய நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது சட்டமன்ற உறுப்பினரின் நிலையைத் தீர்மானிப்பதற்காக ஒரு சுயாதீன தீர்ப்பாயத்தை நியமிக்க வேண்டும் என்று இந்தத் தீர்ப்பு கூறியுள்ளது.
- ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி அல்லது உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி தலைமையிலான ஒரு நிரந்தரத் தீர்ப்பாயத்தை அமைக்க இந்த நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளது.
- ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்த உறுப்பினராகவும் சபையின்

உறுப்பினராகவும் இருக்கும் ஒரு சபாநாயகர் ஏன் ஒரு அரசியல் கட்சிக்குத் தாவுதல் தொடர்பான தகுதி நீக்கத்தில் "ஒரே மற்றும் இறுதி நடுவராக" இருக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

- சபாநாயகர்கள் பத்தாவது அட்டவணையின் கீழ் வரும் தகுதி நீக்க மனுக்களின் மீது "குறிப்பிட்ட காலத்திற்குள்" முடிவுகளைத் தீர்மானிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான தகுதி நீக்க நடவடிக்கைகளை சபாநாயகர் மூன்று மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என்று இந்திய உச்ச நீதிமன்றமானது உச்சபட்ச கால வரம்பை நிர்ணயித்துள்ளது.

*பின்னணி*

- கிஹோட்டோ ஹோலோஹன் (1992) என்ற ஒரு முக்கியமான வழக்கின் தீர்ப்பில் இந்திய உச்ச நீதிமன்றம் ADLன் செல்லுபடித் தன்மையை உறுதி செய்துள்ளது.
- இந்தத் தீர்ப்பானது சபாநாயகரின் உத்தரவை சில வரையறைகளுக்கு உட்படுத்தும் வகையில் நீதித்துறையின் மறுஆய்விற்கு உட்படுத்தியது.
- அதில், சபாநாயகர் ஒரு உத்தரவை பிறப்பிக்காவிட்டால் நீதிமன்றத்தின் அதிகார வரம்பானது நடைமுறைக்கு வராது என்பதையும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.
- கட்சித் தாவல் குறித்து சபாநாயகர் முடிவெடுப்பதற்கு முன்னர் அதில் உச்ச நீதிமன்றம் தலையிடுவதற்கு இது இடமளிக்கவில்லை.
- இது தொடர்பாக 2016 ஆம் ஆண்டில், எஸ்.ஏ.சம்பத்குமார் எதிர் காலே யாதையா வழக்கு என்று பெயரிடப்பட்ட மற்றொரு வழக்கும் இருந்துள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## தேசியத் தரவு மற்றும் பகுப்பாய்வுத் தளம் (NDAP)

- நிதி ஆயோக் அமைப்பானது 2021 ஆம் ஆண்டில் தேசியத் தரவு மற்றும் பகுப்பாய்வுத் தளத்தை (National Data and Analytics Platform - NDAP) தொடங்கப் போவதாக அறிவித்துள்ளது.
- இந்த தளமானது அரசாங்கத் தரவுகளை அணுகுவதை ஜனநாயக மயமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்


## இளவரசர் ஹாரி

- சசெக்ஸ் அரசின் பிரபு என்ற பட்டத்தைக் கொண்ட இளவரசர் ஹாரி பிரிட்டன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்.
- இவர் வேல்ஸ் இளவரசர் சார்லஸ் மற்றும் வேல்ஸின் இளவரசி டயானாவின் இளைய மகன் ஆவார்.
- அவர் பிரிட்டிஷ் சிம்மாசனத்திற்கான வரிசையில் ஆறாவது இடத்தில் உள்ளார்.
- 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இளவரசர் ஹாரி மற்றும் அவரது மனைவி மேகன் மார்க்லே ஆகியோர் அரச குடும்பத்தின் மூத்த உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகுவதற்கான தமது விருப்பத்தை அறிவித்தனர்.

# முக்கிய தினங்கள்

## தேசிய வாக்காளர் தினம் - ஜனவரி 25

- இத்தினமானது 1950 ஆம் ஆண்டு ஜனவரி 25 அன்று இந்தியத் தேர்தல் ஆணையத்தின் (Election Commission of India - ECI) நிறுவன நாளைக் குறிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப் படுகின்றது.
- இது அரசியலமைப்பின் 324வது சரத்து மற்றும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டங்கள் ஆகியவற்றிலிருந்து அதிகாரத்தைப் பெறும் ஒரு அரசியலமைப்புச் சார்ந்த அமைப்பாகும்.
- தேசிய வாக்காளர் தினத்தைக் கொண்டாடுவதன் நோக்கம் இளைஞர்களுக்கு வாக்களிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.
- இத்தின அனுசரிப்பானது 2011 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டின் தேசிய வாக்காளர் தினத்தின் கருப்பொருள் 'ஒரு வலுவான ஜனநாயகத்திற்கான தேர்தல் அறிவு' என்பதாகும்.




## தேசிய சுற்றுலா தினம் - ஜனவரி 25

- நாட்டின் பொருளாதாரத்திற்குப் பங்களிப்பு அளிக்கும் சுற்றுலாவின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகத்தினால் நிறுவப்பட்டது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 6 சதவீதமானது சுற்றுலா துறையில் இருந்து வருகின்றது.
- ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலாத் தினத்தை (செப்டம்பர் 27) கொண்டாடுவதில் இந்தியாவும் பங்கேற்கின்றது.




## இமாச்சலப் பிரதேச மாநிலத்தின் 50வது நிறுவன தினம் - ஜனவரி 25

- 1971 ஆம் ஆண்டில் இந்த தினத்தில் தான் இமாச்சலப் பிரதேசமானது இந்தியாவின் 18வது மாநிலமாக உருவெடுத்தது.
- இது 1948 ஆம் ஆண்டில் இந்திய ஒன்றியத்திற்குள் ஒரு தலைமை ஆணையர் மாகாணமாக நிறுவப் பட்டது.
- 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் தேதியன்று இமாச்சலப் பிரதேசமானது ஒன்றியப் பிரதேசமாக மாறியது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★